இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 94 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 28 – சனிக்கிழமை 14 நவம்பர் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:85 - Issue 94 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 28 - Saturday 14 November 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

மாண்பைக் குலைத்த பேரவை துணைத் தலைவர் மீதும்; கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ. மீதும்;

“Strict Officer” எடுத்த நடவடிக்கை என்ன?

தீபாவளி பரிசு கொடுத்து அனுப்பி வைத்ததுதான் கடும் நடவடிக்கையா? என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் - முதல்வர் விஜய்க்கு சரமாரி கேள்வி!



கிரீஸ் நாட்டில் உள்ள ஏதென்ஸ் நகரில் காவியா கலாநிதி மாறன், அனிருத் ரவிச்சந்தர் திருமணம் 11.11.2026 அன்று நடைபெற்றது. மணமக்களுடன் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், சன் டிவி குழுமத் தலைவர் கலாநிதி மாறன், காவேரி கலாநிதிமாறன், ரவிச்சந்தர், லட்சுமி ஆகியோர் உள்ளனர்.

சென்னை, நவ.14-

மாண்பைக் குலைத்த பேரவைத் துணைத் தலைவர் மீதும், கள்ளக் குறிச்சி த.வெ.க. எம்.எல்.ஏ. மீதும் ‘Strict Officer’ எடுத்த நடவடிக்கை என்ன என்றும், தீபாவளி பரிசு கொடுத்து அனுப்பியது தான் கடும் நடவடிக்கையா என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வர் விஜய்க்கு சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டிருப்பதாவது:

● **“தவறு செய்தால் விட மாட்டேன்” என முதலமைச்சர் விஜய் தனது கட்சி MLA-க்களுக்குக் ‘கடும் எச்சரிக்கை’ விடுத்தார் என Damage Control-காக செய்தித்தாள்களில் ஒரு தகவலை plant செய்திருக் கிறார்கள்.**

● **முதலமைச்சரின் கண்டிப்பு உண்மையானால் என்ன செய்திருக்க வேண்டும்?**

● **பேரவைத் துணைத் தலைவர் பதவியின் மாண்பைக் குலைத்தவர் மீது வழக்குப் பதிவு செய்திருக்க வேண்டும்.**

● **கள்ளக்குறிச்சி MLA மீது உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.**

● **ஆனால் ‘Strict officer’ செய்தது என்ன?**



● **இருவருக்கும் தீபாவளிப் பரிசு கொடுத்து வழியனுப்பி வைத்திருக்கிறார்.**

● **இதுதான் அந்தக் கடும் நடவடிக்கையா? Punch Dialogue மட்டுமே பேசி காலத்தை ஓட்ட இது சினிமா இல்லை!**

● **Real Action எடுத்து, தான் எவ்வளவு strict என்பதை முதலமைச்சர் நிரூபித்துக் காட்ட வேண்டும். வாய் மட்டும் வேலை செய்து எந்தப் பயனும் இல்லை!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பெண் கலெக்டருக்கு குறுஞ்செய்தி! த.வெ.க. எம்.எல்.ஏ. மீது

புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காத தலைமைச் செயலாளர்!

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கொந்தளிப்பு!

சென்னை, நவ. 14-

பெண் கலெக்டருக்கு வாட்ஸப்பில் ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக கூறப்படும் த.வெ.க.,எம்.எல்.ஏ., மீது, அரசு எடுக்க உள்ள நடவடிக்கை என்னவென்று, சக ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் எதிர்பார்த்து காத்திருப்பதாக, தகவல் வெளியாகி உள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டராக இருப்பவர் பத்மஜா. இவருக்கு கள்ளக்குறிச்சி தொகுதி த.வெ.க., எம்.எல்.ஏ., அருள் விக்னேஷ், வாட்ஸாப்பில் ஆபாசகுறுஞ்செய்தி அனுப்பியதாகவும், இது குறித்து பத்மஜா, தலைமைச் செயலர் சாய்குமாரிடம் புகார் அளித்ததாகவும் தகவல் வெளியானது.

சம்பவம் தொடர்பாக, 10 நாட்களுக்கு முன்பு, கலெக்டர் பத்மஜாவின் கணவரும், விழுப்புரம் மாவட்ட கலெக்டருமான ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமைச்செயலர் சாய்குமாருக்கு, புகார் கடிதம் அனுப்பியுள்ளார். இந்த புகார் கடிதம் குறித்து, தற்போது பரபரப்பாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ., மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தி.மு.க., உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இது, அரசுக்கு கடும் நெருக்கடியை கொடுத்துள்ளது.

இந்தப் புகார் மீது தலைமைச்செயலாளரும், முதல்வரும் நடவடிக்கை எடுக்காததால் ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் கொந்தளிப்பில் உள்ளனர்.

பெண் கலெக்டருக்கு குறுஞ்செய்தி - மனுக்கொடுக்க வந்தவரைத் தாக்கிய பேரவை துணைத் தலைவர் - த.வெ.க. எம்.எல்.ஏ.வுக்கு பட்டுவேட்டி - சட்டை வழங்கிய முதல்வர் விஜய்!

தீபாவளி வாழ்த்தும் சொல்லி அனுப்பிய கொடுமை! சமூக வலைதளங்களில் கடும் விமர்சனம்!

சென்னை, நவ.14-

“கள்ளக்குறிச்சி மாவட்ட பெண் ஆட்சியருக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பிய த.வெ.க. எம்.எல்.ஏ.வுக்கும் மனுக்கொடுக்க வந்தவரைத் தாக்கிய பேரவை துணைத் தலைவருக்கும் பட்டுவேட்டி, சட்டை வழங்கி தீபாவளி வாழ்த்தும் தெரிவித்தும் அனுப்பியுள்ளார் முதல்வர் விஜய்!

இதுபற்றிய விவரம் வருமாறு:-

த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் முதல்வர் விஜய் ஒவ்வொரு எம்.எல்.ஏ.வையும் தனித்தனியாக சந்தித்து பேசினார். சர்ச்சை எம்.எல்.ஏ.க்கள் மீது அதிரடி நடவடிக்கை எடுப்பார் என்ற எதிர்பார்ப்பு நிலவிய சூழ்நிலையில் எந்த வித ஆக்சன் இல்லாமல் அவர்களுக்கு தீபாவளி பரிசாக பட்டு வேட்டி புடவை வழங்கி அனுப்பியது சமூக வலைதளங்களில் பெரும் விமர்சனத்தை உண்டாக்கியுள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்ட பெண் ஆட்சியருக்கு கள்ளக்குறிச்சி த.வெ.க. எம்.எல்.ஏ. அருள் விக்னேஷ் ஆபாச குறுஞ்செய்தி அனுப்பிய விவகாரம் சர்ச்சையாகியுள்ளது.

அதுபோல துறையூரில் அடிப்படை வசதிகள் தொடர்பாக புகாரளிக்க சென்ற நபரை துணை சபாநாயகர் ரவிசங்கர் தாக்கிய விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அடுத்தடுத்து புகார்கள் எழுந்து வருவது த.வெ.க. தலைமைக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இதை தொடர்ந்து, கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்த த.வெ.க. தலைமை முடிவு செய்தது.

மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று முன்தினம் மாலை 4 மணி அளவில் முதல்வர் விஜய் தலைமையில் ஆலோசனை கூட்டம் தொடங்கியது. எம்.எல்.ஏ.க்கள் அனைவரையும் தனித்தனியாக முதல்வர் விஜய் அழைத்து பேசியதாக கூறப்படுகிறது.

சர்ச்சை எம்எல்ஏக்கள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக எந்தவித ஆலோசனையும் முதல்வர் விஜய் செய்யவில்லை என்ற தகவல் அனைத்து தரப்பினர் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. அதிரடி ஆக்சன் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்த நிலையில், ஒன்றுமில்லாமல் எம்.எல்.ஏ.க்களுக்கு அறிவுரை கூறி அனுப்பியது எந்த வகையில் நியாயம்? வார்னிங் மட்டும் தானா என்று சமூக வலைதளங்களில் நெட்டிசன்கள் வறுத்தெடுத்து வருகின்றனர்.

கூட்டத்தின் முடிவில் அனைத்து த.வெ.க. எம்.எல்.ஏ.க்களுக்கும் தீபாவளி பரிசாக முதல்வர் விஜய் பட்டு வேஷ்டி சட்டை மற்றும் பட்டு சேலை வழங்கினார். அவ்வளவு தான் பஞ்சாயத்து முடிந்தது என்ற திரைப்பட வசனத்துக்கு ஏற்ப ஒவ்வொரு எம்.எல்.ஏ.க்களுடன் முதல்வர் விஜய் தனித்தனியாக புகைப்படம் எடுத்து கொண்டு, நட்சத்திர விடுதியை விட்டு ஒவ்வொருவராக வெளியேறினர்.